**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 123/2020**

| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|---|---|
| NAME | வெங்கடேசன் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 28.01.2026.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. நான் குடியிருப்பது குடியாத்தம் நகராட்சியில் என்றால் சரிதான். பிரதிவாதிகள் குடியிருப்பது கொண்டசமுத்திரம் ஊராட்சியில் என்றால் சரிதான். எனது வீட்டுடன் குடியாத்தம் நகராட்சி முடிவாகிறது என்றால் சரிதான். எனது வீட்டுக்கு பக்கத்தில் கொண்டசமுத்திரம் ஊராட்சியில் 1999–ல் வாரியார் நகர் என மனை போட்டு விற்பனை செய்து வீடுகட்டி குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

2. 1979–ல் எனது தந்தையார் சொத்தை வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அவர் அளந்து பார்த்து வாங்கினாரா அல்லது அப்படியே வாங்கினாரா என்றால் அளந்து பார்த்து வாங்கினார். எனது அப்பா பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த ஆவணத்தில் எனது தந்தை பெயரில் உள்ள பட்டா உள்ளதா என்றால் இல்லை.

3. நான் கட்டியுள்ள வீட்டை விட பிரதிவாதிகளின் வீடு 4 அடி பள்ளத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் கிழக்கு பக்க சுவற்றில் 2 அடிக்கு 5 அடி அளவில் கதவு போட்டு வைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கதவில் இருந்து கீழே இறங்க படி எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் வீடு கட்டியபோது நகராட்சியில் அனுமதி வாங்கி கட்டினேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள குழாய் வரி, வீட்டு வரி, மின் கட்டண ரசீது ஆகியவை நான் கட்டிய வீட்டிற்காக வாங்கியவை என்றால் ஆமாம்.

4. நான் குடியாத்தம் நகர சர்வே எண்.11/30–க்காக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் வடக்கு தெற்கு 17 அடி என்றால் சரிதான். தாவாவில் கிழக்கு பக்கம் இருபுறமும் 45 அடி என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நகராட்சி ஆவணத்தில் எங்கும் என் சொத்தின் தெற்குபக்கம் 45 அடி என இல்லை என்றாலும் என்வீடு, சந்து, அதன்பிறகு ஒரு கூரைவீடு, அதன்பிறகு ஒரு வீடு மற்றும் அதன்பிறகு மேற்கில் ஒரு தெரு சேர்த்து 123 அடி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தாவாவில் கிழக்கு மேற்கு இருபுறமும் 45 அடி உள்ளதாக தவறாக சொல்லியுள்ளேன் என்றாலும் நான் எதுவரை வீடு கட்டியுள்ளேனோ அதுவரை தான் எனக்கு சொந்தம் என்றால் சரியல்ல.

5. 1999–ல் வாரியார் நகர் அமைத்தபோது நகராட்சி இடத்தை தாண்டி அளந்துபார்த்து கொண்டசமுத்திரம் ஊராட்சியில் பிச்சனூர் சர்வே எண்.219 மனை அமைத்தார்கள் என்றாலும் அதனால் பிரதிவாதிகள் எந்த சமயத்திலும் அந்த சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. 1999–ல் எனது தந்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் அப்போது ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை 2018–ல் இருந்து தான் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார்கள்.

6. என் வீட்டிற்கு இருபுறமும் நான் கட்டியுள்ள அளவில் தான் கட்டியுள்ளார்கள் என்றால் ஒருபுறம் கட்டியுள்ளார்கள் மறுபுறம் கட்டவில்லை. பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக மற்றவர்கள் வழக்கு போடவில்லை என்றால் அவர்களுடையதை ஆக்கிரமிப்பு செய்யவில்லை அதனால் போடவில்லை என்னுடையதை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். 1999–ல் 1ஆம் பிரதிவாதி தான் பிரித்து மனை போட்டார் என்றால் சரிதான். மனை போட்டபிறகு அவர் குடியிருக்கும் இடத்தில் வீடுகட்டி இருந்து வருகிறார் என்றால் சரிதான், அதற்கு பின்னால் எங்களது காலியிடம் உள்ளது.

7. எனது அப்பா 12.12.2002–ல் இறந்தார். எனது அப்பா இறப்பதற்கு முன்பே பிரதிவாதிகள் அந்த இடத்தில் வீடுகட்டி வந்து விட்டார்கள் என்றால் 2000–ல் வந்திருப்பார்கள். எனது அப்பா உயிரோடு இருந்தபோதே பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் எனது அப்பா நடவடிக்கை எடுத்திருப்பார் என்றாலும் அதுபோல் ஆக்கிரமிப்பு செய்யாததால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் 2018–ல் தான் பிரச்சினை செய்தார்கள். எனது அப்பா அனுபவித்த சொத்தை தான் நான் கேட்க முடியும் என்றாலும் அதை தாண்டி பிரதிவாதிகள் ஆக்கிரமித்ததாக சொல்லி நான் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

8. வழக்கறிஞர் ஆணையர் அளவு கல் இல்லாமல் தெருவில் இருந்து அளந்துள்ளார் என்றாலும் அதனால் அவர் தாக்கல் செய்துள்ள அறிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. கொண்டசமுத்திர சர்வே எண்.219 அளவு கல்லில் இருந்து அளக்காமல் மனைப்பிரிவுக்காக போடப்பட்ட தெருவில் இருந்து அளந்துள்ளதால் அவரது அறிக்கை உரிய அளவீடுகளின் படி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் வீடு என் வீட்டை விட பள்ளத்தில் உள்ளதால் அவர்கள் எப்போதும் என் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்யவில்லை என்றாலும் கற்பனையாக ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததாக வழக்கு மூலத்தை கற்பனையாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. உண்மையில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்வதாக இருந்தால் நான் கதவை தாண்டி என் இடத்தில் படி கட்டியிருப்பேன் என்றாலும் என்னுடைய சொத்து வீட்டோடு முடிவதால் படி எதுவும் கட்டாமல் வெறும் கதவை மட்டும் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல அவர்கள் கட்டவிடவில்லை பிரச்சினை செய்தார்கள். வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் கதவு போட்டேன் என்றால் சரியல்ல 2018–ல் போட்டுவிட்டேன். பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கை உண்மை என நிரூபிக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்தபிறகு கதவு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

10. பிரதிவாதிகள் எந்த காலத்திலும் எனது சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்யவில்லை என்றாலும் கற்பனையாக வழக்கு மூலத்தை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதனால் அபராதத்துடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் என்னுடைய வீட்டுக்கானது என்றாலும் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லும் இடத்திற்கானவை இல்லை என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் கற்பனையான பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளதால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.